மாணவர்கள் இப்போது கணினிப் படிப்பை படிக்க அதிக அளவில் முன்வருவதால் தருமபுரி அரசு கலைக் கல்லூரிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து கம்ப்யூட்டர் படிப்பை மாலை நேர சுயநிதி வகுப்புகளாக நடத்த மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றித்தான் பரிசீலிக்க வேண்டுமென்று நான் காரணம் சொன்னேன். ஒன்று, கணிப்பொறித் துறையிலே உள்ள ஆசிரியர்களால் அந்த வகுப்புகளை நடத்தக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். இரண்டாவது, சுயநிதி வகுப்புகளாக தனியாக வகுப்புகளைத் தொடங்குவதைப் பல்கலைக்கழகம் அதனுடைய கொள்கை முடிவின்படி ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, பல்கலைக்கழகத்தோடு மாறுபட்டு சுயநிதி வகுப்புகளை மிக அதிகமாகத் தொடங்குவது என்பது அவ்வளவு முறையும் அல்ல. ஆகவே, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் *9-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 143, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

143—

கிளை மின் நிலையம் அமைத்தல்

***28845—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி நகரில் புதிய கிளை மின் நிலையம் அமைக்க அரசு உத்தரவிட்டும் வேலை நடைபெறவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவாக வேலையைத் தொடங்க அரசு முன்வருமா?

2000 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) 2000-2001-ஆம் ஆண்டில் மின்நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) இந்த வேலை திட்டமிட்டபடி செய்து முடிக்கப்படும்.

திரு. ரா. ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகிரி பகுதியில் அடிக்கடி* Voltage drop *ஏற்படுவதால் விவசாயிகளின் மோட்டார்களில் அடிக்கடி* coil *பழுதாகிறது. அதனை நீக்க அந்தப் பகுதியில் ஒரு* Sub-station *ஏற்படுத்த வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்கு கடந்த ஆண்டிற்கு முன்னாலே கொண்டு வரப்பட்டது. இதுவரையில் அதற்குரிய நிலம் தேர்வு செய்யப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் முயற்சி எடுக்கிறார்கள். ஆனால் இதுவரையில் நிலத்தை தேர்வு செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, கூடிய விரைவில் நிலத்தைத் தேர்வு செய்து அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு* Sub-station *வழங்கினால்தான், விவசாயிகளின் மோட்டார் பழுதில்லாமல் இயங்குவதற்கு வாய்ப்பிருக்கும். அதே நேரத்தில் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் பெரும்பாலும் மோட்டாரைப் பயன்படுத்தித்தான் விவசாயம் செய்து வருகிறார்கள். 6 மணி நேரமாக இருந்த மின்சார விநியோகம் தற்போது 4 மணி நேரமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விவசாயம் பாதிக்கப்படுகிறது. தற்போது வழங்கப்படும் 4 மணி நேர மின் விநியோகம் என்பதை மீண்டும் 6 மணி நேரமாக அதிகரித்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய இரண்டு வினாக்களுக்கும் நான் விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர் குறிப்பிட்ட வாசுதேவநல்லூர், சிவகிரி நகரில் 110 கிலோவாட் துணை மின்நிலையம் அமைப்பது குறித்து இதே அவையிலே அவர் பேசி, நானும் வாக்குறுதி தந்து, மின்சார வாரிய ஆணை எண் 124, நாள் 29-6-1998-இலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்தத் துணை*

மின்நிலையம் அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்ய அதிகாரிகள் எவ்வளவோ முயற்சி செய்தும்கூட இடம் கிடைக்கவில்லை. ஆனாலும் அதிகாரிகள் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு மாதத்திலே இடம் கிடைத்துவிடும் என்றும் உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த இடம் கிடைப்பதற்கு மாண்புமிகு உறுப்பினரும் ஒத்துழைப்புத் தந்து, அந்த நிலத்தை வாங்கித் தருவாரேயானால்—ஒரு துணை மின்நிலையம் அமைக்க ஓராண்டு காலம் ஆகும். ஆனால் திரு. ஈஸ்வரன் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று—இடம் கிடைத்த 8 மாதங்களிலேயே அந்தத் துணை மின் நிலையத்தைக் கட்டித் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஏனென்றால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு எங்கும் Voltage drop இருக்கக் கூடாது என்று சொல்லி, அதுகுறித்து முதல் கவனம் செலுத்தச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதற்கு உரிய நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதியொதுக்கத்திலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. இரண்டாவது, விவசாயிகளுக்கு பகல் நேரத்திலே 4 மணி நேரம் மட்டும் மின்சாரம் தருவதால், விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். பல ஆண்டுகாலமாக தமிழகத்திலே கோடைக்காலத்தில் இரண்டு மாதங்களுக்கு பகலிலே 4 மணி நேரமும் இரவிலே 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை 300 மெகாவாட்டாக இருக்கின்ற காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலே, நிச்சயமாக இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்காது. மே மாதம் 15 ஆம் தேதி வரையில் விவசாயிகள் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து இரவு நேரத்திலே கிடைக்கின்ற 8 மணி நேர மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரா. ஈஸ்வரன்.

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இரவில் 8 மணி நேரம் கொடுக்கக்கூடிய மின்சாரத்தை 6 மணி நேரம் மட்டும் கொடுத்து, பகலில் 2 மணி நேரம் கூடுதலாகக் கொடுத்தால் நலமாக இருக்கும். விவசாயிகள் இரவுநேரங்களில் காட்டில் போய், விடியவிடிய பாம்பு, பல்லி இருக்கும்போது அலைய வேண்டியிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் இரவில் அளிக்கப்படும் 8 மணி நேர மின்சாரத்தை 6 மணி நேரமாகக் குறைத்து, பகலில் அளிக்கப்படும்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2000 மார்ச் 30]

4 மணி நேர மின்சாரத்தை 6 மணி நேரமாக உயர்த்திக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிலைமை நன்றாகத் தெரியும். எல்லோரும் கலந்துதான் இந்த முடிவை எடுத்திருக்கிறோம். எனவே மே மாதம் 15 ஆம் தேதி வரையில் பகலிலே விவசாயிகளுக்கு 6 மணி நேரம் மின்சாரம் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிச்சயமாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 144, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

144—

எரிவாயு மின் சுழலித் திட்டம்

***32593—திரு. குத்தாலம் பி. கல்யாணம்.**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலத்தில் எரிவாயு மின் சுழலித் திட்டம் ரூ.300 கோடி நிதி ஒதுக்கீட்டில் 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு மருத்தூர் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நன்செய் நிலத்தை எடுக்க நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக ஆணை வழங்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை, சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மூலம் அரசிற்கு வந்துள்ளது. மேற்படி செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.